217—

கூட்டுறவுச் சங்கங்களின் கடன்களைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை

* **30179**—*திரு. சி. குழந்தைவேலு :*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்ற மத்திய மற்றும் குறுகிய கால கடன்களின் வட்டியைத் தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களில் பெற்ற மத்திய மற்றும் குறுகிய கால கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்ய இயலாது.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வெள்ளம் பாய்ந்த பகுதிகளில் என்னுடைய குளத்தூர் தொகுதியும் ஒன்றாகும். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இல்லை என்று சொல்லாது வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இதுவரை 300 கோடிக்கு மேல் நலத்திட்டங்களை வழங்கி உதவி புரிந்துள்ளார்கள். இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறியுள்ளார். விவசாயிகளுக்கு கடனை புதுப்பித்தாவது கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பெறப்படுகின்ற கடன்களில் வட்டி தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சில நிபந்தனைகள் உள்ளன. அதாவது வேளாண்மையிலே பெறுகின்ற அந்த விவசாய வருவாய் இருக்கிறதே அது 37 பைசாவுக்கு கீழே போகுமானால் அதற்கு

அனாவாரி நற்சான்றிதழ் ஒன்றை வட்டாட்சியர் கொடுப்பாரானால் அந்த அடிப்படையில் மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பெறுகின்ற கடன்களுடைய வட்டியைத் தள்ளிப்போட்டு கடன்களை ஒரு ஆண்டுக்குள் செலுத்த வேண்டும் என்பதை 3 ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடலாம். இரண்டாவது ஆண்டும் வறட்சியின் காரணமாக பயிர் விளைச்சல் சரியாக இல்லை என்று சொன்னால் அந்த காலகட்டத்திலே கட்ட வேண்டிய கடனை 5 ஆண்டுகளாக அதிகமாக தள்ளிப்போடலாம். இப்படி தள்ளிப் போடுவதன் மூலமாக மீண்டும் புதிய கடனைப் பெறுகின்ற விவசாயிகள் புதிதாகக் கடனைப் பெற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 218, திரு. மா. சுந்தரதாஸ் இருக்கையில் இல்லை.

வினா எண் 219. திருமதி கற்பகம் இளங்கோ. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

219—

காரைக்குடி நகராட்சியில் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்தல்

***21112**—*திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி நகராட்சியின் முக்கிய இடங்களில் சோடியம் வேப்பர் மற்றும் தெரு விளக்குகள் கூடுதலாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி நகராட்சியில் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதால் சோடியம் ஆவி விளக்கு அமைக்க இயலாது. 4 அடி குழல் விளக்குகள் 166 அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி கற்பகம் இளங்கோ: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை வீடுகளில் வசிப்பவர்களும் மின் விளக்குகள் இன்பத்தை பெற்று ஒளிமயமாக வாழவேண்டும் என்ற உன்னத நோக்கோடு ஒரு வீடு ஒரு விளக்கு தந்த நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது காரைக்குடி நகரத்தில் முக்கிய வீதிகளில் அதாவது நகர மக்களின் வசதியைப் பொறுத்து புதிய